# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>தலைமைக் காவலருக்கு கீழ்மை நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தலைமைக் காவலரால் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் உயர்நீதிமன்றம் கீழ்மை நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்தது.</u>

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் காவல் நிலையத்தில் கடந்த 2008ஆம் ஆண்டு திரு.சந்திரசேகர், வயது-53, என்பவர் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது காவல் நிலையத்தில் சந்தேகத்தின் பேரில் பறிமுதல் செய்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தத திருவண்ணாமலை மாவட்டம், அரசானி பாளையத்தை சேர்ந்த புகார்தாரர் திரு.சங்கர் என்பவரின் இருசக்கர வாகனத்தை விடுவிக்க லஞ்சமாக பணம் ரூ.5000/-த்தை 16.12.2008 அன்று பெற்ற குற்றத்திற்காக திரு.சந்திரசேகர் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வு முடிக்கப்பட்டு, செங்கல்பட்டு தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்கள் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் குற்றம் நிரூபணமானதால் செங்கல்பட்டு தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்கள் கடந்த 30.01.2019 அன்று எதிரி திரு.சந்திரசேகர் என்பவருக்கு ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 7-ன்படி எதிரிக்கு 3 வருடம் கடுங்காவல் தண்டனையும், மற்றும் அபராதம் ரூ.5,000/- மற்றும் பிரிவு 13(2) r/w 13(1)(d) of PC Act –ற்கு 3 வருடம் கடுங்காவல் தண்டணையும் மற்றும் அபராதம் ரூ.5,000/-ம் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து எதிரி திரு.சந்திரசேகர், சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையிட்டு வழக்கு தொடர்ந்தார், இவ்வழக்கை விசாரித்த மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு.G.ஜெயச்சந்திரன் அவர்கள் செங்கல்பட்டு தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்கள் எதிரி திரு.சந்திரசேகர் என்பவருக்கு அளித்த தண்டனை தீர்ப்பை உறுதி செய்து இன்று 21.04.2023 தீர்ப்பு வழங்கினார்.